# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2009 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூகசேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

### 2009 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூகசேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 4/2008

### பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூகசேவை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூக சேவை மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் பண்டாரகம வில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம், அது, எக்குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண் ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூகசேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூகசேவை மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனவழைக்கப்படும்) பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூக சேவை மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை

2-PL 004183 -1,050 (2009/07)

ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூக சேவை மன்றம்" என்ற பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் என்பதுடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக் கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவத்தையும் அதிகாரத்தையும் அது கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது:-

(அ) பின்வருவனவற்றைப் பராமரிப்பதற்கும் பண்டாரகம தர்மாயதனய பிரிவென மற்றும் பின்வரும் இணைக்கப் பட்ட நிறுவனங்களான

(i) ஸ்ரீ பன்னலங்கா தம்ம பாடசாலை ;

(ii) விக்கிரமசீலா கலை நிறுவகம் ;

(iii) விக்கிரமசீலா பணியாயாட்டொகுதிச் சபை ;

(iv) பண்டாரகம சமூக அபிவிருத்தி மன்றம் ;

(v) சங்கமித்த மகளிர் கழகம் ;

(vi) சமகி ஈமக்கிரிகைக்கு உதவும் கழகம் ; அத்துடன்

(vii) விக்கிரமசீல மகா பெரஹர ஒழுங்கமைப்பு,

என்பவற்றின் சமூக மற்றும் கலாச்சார நியமங்களை மேம்படுத்துவதற்காக வெற்றிகரமாகத் தொடர்வதற் கும் தேவையானவற்றை வழங்குதல் ;

(ஆ) புதிய சயித்தயவை நிர்மாணித்தலும் தர்மாயதனய அமைந்திருக்கும் வளவுகளை கலாசார முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாக மேம்படுத்துதலும் பாதுகாத்தலும் ;

(இ) இடப்பரப்பிலுள்ள வறியவர்களுக்கும் மற்றும் ஆதரவற்றோருக்கும் வீடுகள், சுகாதார வசதிகள் மற்றும் குடிநீர் என்பவற்றை வழங்குதல் ;

(ஈ) வறியவர்களுக்கும் அறுவை மருத்துவம் வேண்டுவோருக்கும் பண உதவியை ஏற்பாடுசெய்தல் ;

(உ) இடப்பரப்பில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இயைபான ஆதனங்களைப் பெறுதலும் அவற்றை மேம் படுத்தலும்;

(ஊ) மாவட்டத்திலுள்ள வறிய மற்றும் உதவிகள் தேவைப் படும் பாடசாலைச் சிறார்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல் ;

(எ) இடப்பரப்பிலுள்ள மாணவர்கள், இளைஞர் மற்றும் வளர்ந்தோரின் போசணை மட்டத்தையும் விளையாட்டுத் திறமையையும் தேசிய மட்டத்திற்கு மேம்படுத்தல் ;

(ஏ) விசேடமாக ஆதரவற்ற சிறுவர்களுக்கு வீடுகளைக் கட்டுதல் மற்றும் தற்போதுள்ள வீட்டுவசதிகளை மேம் படுத்தலும் ;

(ஐ) இயைபான அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் வெளிநாடுகளில் உயர்கல்விக்காக தொழில் நுட்பவியற்துறையில் புலமைப்பரிசில்களை வழங்குதல் மற்றும் இயற்கை அனர்த்தங்களின்போது உதவிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஒ) யாத்திரைகள் செய்வதற்காக கிராமவாசிகளுக்கு வசதிகளை ஏற்பாடுசெய்தல்.

(2) மேற்குறித்த குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் கூட்டுத்தாபனம் இனம், சாதி, மதம், மொழி, பால் அல்லது அரசியற்கொள்கை என்ற அடிப்படையில் அவை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

*அலுவலர்களின் நியமனம்.*

**4.** கூட்டுத்தாபனத்தின் செயலாளர், தவிசாளர், பொருளாளர், கணக்காளர் என்போரின் நியமனம் இதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, பதவிதாங்குநர்களையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய வாறும் அவற்றிற்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் கொண்ட நிறைவேற்றுக்குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**6.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இடப்பரப்பின் அபிவிருத்திக்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்தல் ;

(ஆ) கிராமவாசிகளால் தேவைப்படுத்தப்படுகின்ற சேவைகளை வழங்குதலும் அவர்கள் திருப்தியுறும் விதத்தில் கடமைகளை நிறைவேற்றுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் ஆவணங்களைப் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைத்திருத்தலும் அவற்றைப் பாதுகாத்தலும் ;

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள மூலங்களிலிருந்து ஒப்பப்பணம், மானியங்கள், நன்கொடைகளைக் கையேற்றல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்காக சபை அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகள்மீது கடன்களைப் பெறுதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், வகுப்பாக்கம் அல்லது அவர்களை நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களையும் நிறைவேற்றுக்குழுவையும் தேர்ந்தெடுத்தலும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நிறைவேற்றலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் நிறைவேற்றுக்குழுவினதும் கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் அதன் நிதியங்களின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(உ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படக்கூடியவாறான அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, இறுதிவிருப்பாவனக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் இதற்கு முன்னர் அல்லது இதனகத்துப்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங் களும் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப்பிரயோகிக்கையிலும், கடமைகளைப் புரிகையிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செல்மதியாக வுள்ளனவும் அதற்குச் செலுத்தப் படவுள்ளவுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய தினத்தன்று மன்றத்திற்குரிய அதன் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள தனிசுகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியன எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது எவ்வாறு பொறிக்கப்பட வேண்டுமென்பது.*

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்கள் முன்னிலையிலன்றி எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் “தகைமை பெற்ற கணக்காய்வாளர்” என்பது–

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கலைத்தலின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட லாகாது. ஆனால் அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்

தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல், தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவகம் அல்லது வேறு நிறுவகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், அல்லது ஏதேனும் அரசியற் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்